மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-30

2. அறிவிப்பு.

பேரவைக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, சென்ற ஒரு வாரம் முழுவதும் பேரவைக்கு விடுமுறை அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பேரவைக் குழுக்களின் தேர்தலுக்கான நிகழ்ச்சி நிரல் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது :

ஒற்றை வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் மதிப் பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, உரிமைக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாளை 1992—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22—ஆம் நாள் புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செய லாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாளைச் செயலாள ரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 1992—ஆம் ஆண்டு ஏப்ரல் 23—ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1992—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24—ஆம் நாள் வெள்ளி கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்கள் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண் டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் குழு உறுப் பினர்களைத் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப் படும்.